KPR IAS Academy
Institute for IAS, IPS, IFS and TNPSC Exams
Learn Beyond
No. 5, AKS Nagar, Near Gandhi Park, Coimbatore - 641 001



சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் ஆளுநர் ஆர்.வி.ஆர்லேகருடன் குழுப் புகைப்படம் எடுத்துக்கொண்ட முதல்வர் விஜய் மற்றும் அமைச்சர்கள். உடன், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி.

# முதல்வராகப் பதவியேற்றார் ஜோசப் விஜய்

சென்னை, மே 10: தமிழக முதல்வராக தவெக தலைவர் ச.ஜோசப் விஜய் (51) ஞாயிற்றுக்கிழமை பதவியேற்றார். அவருக்கு ஆளுநர் ஆர்.வி.ஆர்லேகர் பதவிப் பிரமாணமும், ரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார். விஜய்யுடன் அவரது கட்சியினர் 9 பேர் அமைச்சர்களாகப் பதவியேற்றனர்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தவெக தனித்துப் போட்டியிட்டு 108 இடங்களில் வெற்றி பெற்றது. இரு தொகுதிகளில் விஜய் போட்டியிட்டு வெற்றி பெற்றதால் அக்கட்சிக்கு 107 பேரவை உறுப்பினர்கள் உள்ளனர். தனிப் பெரும்பான்மைக்கு 118 உறுப்பினர்கள் தேவை என்ற நிலையில், திமுக கூட்டணியில் இருந்த காங்கிரஸ் தனது 5 பேரவை உறுப்பினர்களின் ஆதரவை தவெக ஆட்சி அமைக்க அளித்தது. இதைத் தொடர்ந்து, தலா இரு இடங்களில் வெற்றி பெற்ற இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விசிக, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகளும் தவெகவுக்கு ஆதரவு அளித்தன. இதனால் அக்கட்சி ஆட்சி அமைக்க 120 உறுப்பினர்களின் ஆதரவு கிடைத்தது.

இதையடுத்து, ஆளுநர் ஆர்லேகரை சனிக்கிழமை மாலையில் விஜய் சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரினார். இதையேற்று, விஜய்யை முதல்வராக நியமித்து ஆளுநர் உத்தரவு கடிதம் அளித்தார். விஜய் முதல்வராகப் பதவியேற்கவும், அவரது அமைச்சரவை பதவியேற்கவும் ஆளுநர் கேட்டுக்கொண்டார்.

இதைத் தொடர்ந்து, விஜய் முதல்வராகப் பதவியேற்கும் விழா சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கில் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்றது.

விழாவில் காங்கிரஸ் முன்னாள் தலைவரும், மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தியுடன் சேர்ந்து விஜய் மேடைக்கு வந்தார். இதையடுத்து, விஜய்க்கு பதவிப் பிரமாணம் செய்து வைக்குமாறு ஆளுநரை தலைமைச் செயலர் எம்.சாய்குமார் கேட்டுக்கொண்டார். அதன்படி, விஜய்க்கு முதல்வராக ஆளுநர் பதவிப் பிரமாணமும், ரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார்.

'சி.ஜோசப் விஜய் எனும் நான்' என்று தொடங்கி பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டார். அப்போது அரங்கம் முழுவதும் நிறைந்திருந்த தவெக தொண்டர்கள் ஆர்ப்பரித்தனர். அவரைத் தொடர்ந்து, ஒன்பது அமைச்சர்கள் பதவியேற்றனர்.

பதவியேற்பைத் தொடர்ந்து முதல்வர், அமைச்சர்களுடன் ஆளுநர் குழு புகைப்படம் எடுத்து விட்டுச் சென்றார்.

முன்னதாக, பதவியேற்பு விழாவில் பங்கேற்க சென்னை பனையூரில் இருந்து புறப்பட்ட விஜய்க்கு வழிநெடுகிலும் மக்கள் சாலையோரம் நின்று வாழ்த்து தெரிவித்தனர்.




சென்னை தலைமைச் செயலகத்தில் கோப்புகளில் கையொப்பமிட்ட முதல்வர் விஜய்.

## மூன்று கோப்புகளில் கையொப்பமிட்ட முதல்வர்

பதவியேற்பு நிகழ்வு முடிந்தவுடன் விழா மேடையிலேயே முதல்வர் விஜய், தவெக தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ளவற்றில் மூன்று வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் கோப்புகளில் கையொப்பமிட்டார். அதில், இரண்டு மாதங்களுக்கு 500 யூனிட் வரை மின்சாரத்தைப் பயன்படுத்தும் நுகர்வோருக்கு 200 யூனிட் கட்டணமில்லா மின்சாரம் வழங்கும் திட்டம், பெண்களின் பாதுகாப்புக்காக 'சிங்கப் பெண் சிறப்பு அதிரடிப் படையை' உருவாக்கும் திட்டம், போதைப் பொருள் தொடர்பான குற்றங்களைத் தடுக்க மாவட்டங்களிலும், மாநகரங்களிலும் 65 போதைப் பொருள்கள் தடுப்புப் படைகளை உருவாக்கும் திட்டம் ஆகியவை அடங்கும்.

## முதலில் வந்தே மாதரம்... கடைசியில் தமிழ்த்தாய் வாழ்த்து...

குடியரசுத் தலைவர், குடியரசு துணைத் தலைவர், மாநில ஆளுநர்கள் பங்கேற்கும் விழாக்களில் நிகழ்ச்சியின் தொடக்கத்திலும், இறுதியிலும் முதலில் தேசியப் பாடலான வந்தே மாதரம், அதன் பிறகு தேசிய கீதம் பாடப்படுவது மரபு.

அரசு நிகழ்ச்சிகளின் தொடக்கத்திலும், நிறைவிலும் வந்தே மாதரம் இசைக்கப்பட வேண்டும் என அண்மையில் மத்திய அரசு உத்தரவிட்டிருந்த நிலையில், தமிழகத்தில் புதிதாக அமைந்துள்ள விஜய் தலைமையிலான அரசு பதவியேற்பு விழாவில் முதலில் வந்தே மாதரம் பாடல் பாடப்பட்டது.

தொடர்ந்து தேசிய கீதமும், கடைசியாக தமிழ்த்தாய் வாழ்த்தும் பாடப்பட்டது. விழாவின் முடிவிலும் முதலில் வந்தே மாதரம், அடுத்ததாக தேசிய கீதம் பாடப்பட்டது.

## 9 அமைச்சர்கள் பதவியேற்பு

முதல்வராக விஜய் பதவியேற்றதைத் தொடர்ந்து பதவியேற்ற 9 அமைச்சர்கள் விவரம்:

1. என்.ஆனந்த் (தியாகராய நகர் தொகுதி), 2. ஆதவ் அர்ஜுனா (வில்லிவாக்கம்), 3. கே.ஜி. அருண் ராஜ் (திருச்செங்கோடு), 4. கே.ஏ.செங்கோட்டையன் (கோபிசெட்டிப்பாளையம்), 5. பி. வெங்கடரமணன் (மயிலாப்பூர்), 6. ஆர்.நிர்மல்குமார் (திருப்பரங்குன்றம்), 7. ராஜ்மோகன் (எழும்பூர்), 8. டி.கே. பிரபு (காரைக்குடி), 9.ச.கீர்த்தனா (சிவகாசி).

செங்கோட்டையன் பதவியேற்கச் சென்றபோது விஜய் எழுந்து நின்று அவருக்கு வாழ்த்து தெரிவித்தார். இதில், 5 அமைச்சர்கள் சென்னை தொகுதிகளைச் சேர்ந்தவர்கள். பல் மருத்துவரான, டி.கே. பிரபு, நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானை எதிர்த்து வெற்றி பெற்றவராவார். சிவகாசி தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ச.கீர்த்தனா, விஜய் அமைச்சரவையில் இடம் பெற்றுள்ள இளம் பெண் அமைச்சராவார். 29 வயதான அவர் 5 மொழிகளில் பேசக் கூடியவர்.

## பிரதமர் தொலைபேசியில் வாழ்த்து



புது தில்லி, மே 10: தமிழக முதல்வராகப் பதவியேற்ற விஜய்க்கு பிரதமர் நரேந்திர மோடி தொலைபேசி வாயிலாக வாழ்த்து தெரிவித்தார்.

இது குறித்து பிரதமர் மோடி வெளியிட்ட எக்ஸ் பதிவில், தமிழக முதல்வராகப் பதவியேற்றுள்ள ச.ஜோசப் விஜய்யின் பதவிக் காலம் சிறப்பானதாக அமைய வாழ்த்துகள். மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த மத்திய அரசு தமிழக அரசுடன் தொடர்ந்து இணைந்து பணியாற்றும் எனத் தெரிவித்துள்ளார்.

தனக்கு வாழ்த்து தெரிவித்த பிரதமர் மோடிக்கு நன்றி கூறி, முதல்வர் விஜய் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். அதில், நமது மக்களின் நல்வாழ்வும், வளர்ச்சியுமே ஒரே குறிக்கோள். தமிழகத்தின் நீடித்த வளர்ச்சிக்காக மத்திய அரசின் துடிப்பான ஆதரவு மற்றும் ஒத்துழைப்பை எதிர்நோக்குகிறேன் என்று விஜய் தெரிவித்துள்ளார்.

## திமுக, அதிமுக பங்கேற்கவில்லை

விஜய் பதவியேற்பு விழாவில் திமுக, அதிமுகவினர் பங்கேற்கவில்லை. விழாவில் தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன், முன்னாள் தலைவர் தமிழிசை சௌந்தரராஜன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலர் மு.வீரபாண்டியன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலர் பெ.சண்முகம், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட எஸ்.எஸ்.பி.சையத் பாரூக் பாஷா (வாணியம்பாடி), ஏ.எம்.ஷாஜகான் (பாபநாசம்), விஜய்யின் பெற்றோர் எஸ்.ஏ.சந்திரசேகர், ஷோபா சந்திரசேகர், நடிகை த்ரிஷா, தயாரிப்பாளர் அர்ச்சனா கல்பாத்தி, தொழிலதிபர் மார்ட்டின், அவரது மனைவியும், அதிமுக சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவருமான லீமா ரோஸ் (லால்குடி), விஜய்யின் நண்பர்கள், உறவினர்கள், திரையுலக பிரபலங்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.



தமிழகம் ஒரு புதிய தலைமுறையை, ஒரு புதிய குரலை, ஒரு புதிய நம்பிக்கையைத் தேர்வு செய்துள்ளது. தமிழக மக்களின் எதிர்பார்ப்புகளை அவர் பூர்த்தி செய்ய வாழ்த்துகள்.

- ராகுல் காந்தி

# இடைக்கால பேரவைத் தலைவராக மு.வீ.கருப்பையா பதவியேற்பு



சென்னை மே 10: 17-ஆவது சட்டப்பேரவை திங்கள்கிழமை (மே 11) கூடும் நிலையில், இடைக்கால சட்டப்பேரவைத் தலைவராக சோழவந்தான் (தனி) தொகுதி உறுப்பினர் மு.வீ.கருப்பையா ஞாயிற்றுக்கிழமை பதவியேற்றார்.

மு.வீ.கருப்பையாவை இடைக்கால சட்டப்பேரவைத் தலைவராக நியமிக்க முதல்வர் விஜய் ஒப்புதல் அளித்ததைத் தொடர்ந்து, ஆளுநர் மாளிகையில் இடைக்கால சட்டப்பேரவைத் தலைவர் பதவியேற்பு நிகழ்ச்சி ஞாயிற்றுக்கிழமை (மே 10) மாலை நடைபெற்றது. இதில், முதல்வர் விஜய், புதிதாகப் பதவியேற்ற அமைச்சர்கள், தலைமைச் செயலர் எம்.சாய்குமார், ஆளுநரின் செயலர் கிர்லோஷ் குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இடைக்கால பேரவைத் தலைவர் மு.வீ.கருப்பையாவுக்கு ஆளுநர் ஆர்லேகர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். கடவுள் பெயரால் மு.வீ.கருப்பையா உறுதிமொழி ஏற்றுக் கொண்டார். தொடர்ந்து, அவருக்கு ஆளுநர் ஆர்லேகர், முதல்வர் விஜய் ஆகியோர் பூங்கொத்து அளித்து வாழ்த்து தெரிவித்தனர்.

பொதுவாக மக்களவை, மாநில சட்டப்பேரவைகளில் மூத்த உறுப்பினர் கட்சி பேதமின்றி, இடைக்கால பேரவைத் தலைவராக நியமனம் செய்யப்படும் மரபு பின்பற்றப்படுகிறது. இடைக்கால பேரவைத் தலைவர், தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைப்பார்.

சோழவந்தான் (தனி) தொகுதியில் தவெக சார்பில் போட்டியிட்டு சட்டப்பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மு.வீ.கருப்பையா, அலங்காநல்லூர் அருகே உள்ள வாவிடமருதூரைச் சேர்ந்தவர். இவர் திமுக வேட்பாளர் ஆ.வெங்கடேசனைவிட 2,678 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றார்.

முன்னதாக, அதிமுகவில் இருந்த கருப்பையா, 2011 சட்டப்பேரவைத் தேர்தலில் பாமக வேட்பாளரைவிட 36,000 வாக்குகள் கூடுதலாகப் பெற்று வெற்றி பெற்றார். அதிமுகவில் மீனவரணியிலும் இருந்தவர். அதிமுக சார்பில் போட்டியிட வாய்ப்பு கிடைக்காத நிலையில், தேர்தலின்போது அக்கட்சியில் இருந்து விலகி தவெகவில் இணைந்தார்.

# முதல்வரின் நேரடி கண்காணிப்பில் சிங்கப்பெண் அதிரடிப்படை

## அரசாணை வெளியீடு

சென்னை,மே 10: பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கில் முதல்வர் விஜய்யின் நேரடி கண்காணிப்பில் மாநிலம் முழுவதும் சிங்கப்பெண் என்ற பெயரில் சிறப்பு அதிரடிப்படை அமைப்பதற்கான அரசாணை வெளியிடப்பட்டது.

தமிழக முதல்வராக தவெக தலைவர் விஜய் ஞாயிற்றுக்கிழமை பதவியேற்றார். அப்போது, அவர் தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்ட முக்கிய வாக்குறுதிகளைச் செயல்படுத்தும் வகையில் 3 கோப்புகளில் கையொப்பமிட்டார். அதில் பெண்கள் பாதுகாப்புக்காக சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை அமைப்பதற்கான அறிவிப்பும் இடம்பெற்றது.

இதைத் தொடர்ந்து, சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை அமைப்பதற்கான அரசாணையை உள்துறை கூடுதல் தலைமைச் செயலர் க.மணிவாசன் வெளியிட்டார். அதில் கூறியிருப்பதாவது:

பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கில் தடுப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை முதன்மை இலக்காகக் கொண்டு செயல்படும் வகையில் தனிச் சிறப்பு அதிரடிப்படை உருவாக்கப்படும். ஆபத்தில் உள்ள பெண்களுக்கு உடனடியாக உதவி வழங்கவும், பொதுமக்களிடையே பாதுகாப்பு உணர்வையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தும் வகையில் இந்தப் படை செயல்படும். மேலும், இந்தப் படையில் மாநிலம் முழுவதும் போதுமான காவலர்கள் மற்றும் அதிநவீன வசதிகளும் அமைக்கப்படும்.

முதல்வரின் நேரடி கண்காணிப்பில்... முதல்வர் விஜய்யின் நேரடி கண்காணிப்பின் கீழ் இயங்கும் இந்த சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படைக்கு ஐஜி தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவில் ஒரு காவல் கண்காணிப்பாளர், 2 துணை காவல் கண்காணிப்பாளர், 4 காவல் ஆய்வாளர்கள், 8 காவல் உதவி ஆய்வாளர்கள், 20 பிற பதவிகளைச் சேர்ந்த காவலர்கள் இருப்பார்கள்.

சிங்கபெண் அதிரடிப்படை செயல்பாடுகள் குற்றச் சம்பவங்கள் நிகழ வாய்ப்புள்ள இடங்களைக் கண்டறிந்து அந்த இடங்கள் கண்காணிக்கப்படும். மேலும், பொது இடங்களில் குற்றச்சம்பவங்கள் நடைபெறாமல் தடுத்து, பெண்களுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்கும் நோக்கில், காவலர்களின் கண்காணிப்பு மற்றும் ரோந்து பணிகள் மேம்படுத்தப்படும்.

பேருந்து நிறுத்தங்கள், ரயில் நிலையங்கள், கல்வி நிலையங்கள், தகவல்தொழில்நுட்ப நிறுவனங்கள் அமைந்துள்ள இடங்கள் உள்ளிட்ட நெருக்கடி மிகுந்த பகுதிகளில் அதிக அளவிலான போலீஸார் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

பாதிக்கப்பட்டவர்களின் புகார்கள் மீதும் விரைந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், அவர்களை மீட்டு அவர்களின் பாதுகாப்பு மற்றும் நலனை உறுதி செய்வதுடன், இதர உதவிகளும் உரிய நேரத்தில் கிடைக்க வழிவகை செய்யப்படும். சமூக நலத்துறை, கல்வித் துறை, அரசு சாரா தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து ஒருங்கிணைந்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதுடன், அனைத்து தரப்பு மக்களையும் ஒருங்கிணைத்து, பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்தும் பணிகளில் ஈடுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழக கஜானா காலி: வெள்ளை அறிக்கை வெளியிடப்படும்

## முதல்வர் விஜய் உறுதி

சென்னை, மே 10: தமிழக கஜானா காலி செய்து வைக்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் நிதிநிலைமை குறித்து வெள்ளை அறிக்கை வெளியிடப்படும் என்று முதல்வர் விஜய் தெரிவித்தார்.

முதல்வராக பதவியேற்றுக்கொண்ட அவர், பதவியேற்பு விழா முடிந்ததும் அதே மேடையில் ஆற்றிய உரை:

திரைப்படத் துறையில் ஒரு சாதாரண உதவி இயக்குநரின் மகனாக இருந்த எனக்கு, வாழ்க்கையில் வறுமை, பசி என்றால் என்னவென்று தெரியும். நான் மன்னர் பரம்பரையில் இருந்து வந்தவன் அல்ல. உங்கள் குடும்பத்தில் ஒருவன். என்னை அப்படி நினைத்ததால்தான், வெற்றி பெறவைத்துள்ளீர்கள்.

மக்களை ஏமாற்ற மாட்டேன்: இந்தப் பயணத்தில் எனக்கு பல அவமானங்கள் நடந்தது. அதுபோல உங்களுக்கும் நடந்தது. ஆனால் என் கூடவே நின்றீர்கள். சாத்தியமற்ற வாக்குறுதிகளைக் கொடுத்து ஏமாற்ற மாட்டேன். எது சாத்தியமோ அந்த வாக்குறுதிகளையே நான் சொல்வேன். கோடி மக்கள் என் கூட இருக்கும்போது என்ன வந்தாலும் பார்த்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை உள்ளது.

தமிழக அரசுக்கு ரூ.10 லட்சம் கோடிக்கும் மேல் கடன் உள்ளது. அரசின் கஜானாவை சுத்தமாக துடைத்து வழித்து வைத்துவிட்டுச் சென்றுள்ளனர். தூக்க முடியாத சுமையை ஏற்றி வைத்துவிட்டு சென்றுள்ளனர். அந்த நிலையில்தான் இந்தப் பொறுப்பை ஏற்றுள்ளேன். உள்ளே போய் பார்த்தால்தான் என்ன இருக்கிறது எனத் தெரியும். உள்ளே போய் பார்த்துவிட்டு, தற்போதைய தமிழக அரசு என்ன நிலையில் உள்ளது என்பதை ஒரு வெள்ளை அறிக்கையாக வெளியிடுவேன்.



சென்னை ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற அமைச்சரவை பதவி ஏற்பு நிகழ்ச்சியில் பேசிய முதல்வர் ச.ஜோசப் விஜய்.

தப்பு செய்ய விட மாட்டேன்: மக்கள் பணத்தில் இருந்து ஒரு பைசாகூட தொட மாட்டேன். எனக்கு அவசியமும் இல்லை. இந்த விஜய் தப்பு செய்ய மாட்டான்; தப்பு செய்யவிடவும் மாட்டான். ஜெயித்துவிட்டோம், ஆட்டம் ஆடிப் பார்க்கலாம் என யாரும் நினைக்க வேண்டாம். அந்த எண்ணம் இருந்தால் இந்த நிமிடமே அழித்துவிடுங்கள். இங்கு ஒரே அதிகார மையம்தான், அது நான்தான்.

வாக்குறுதிகளை நிறைவேற்றுவேன்: நான் யாரையும் மறைமுகமாக, முகத்தை மூடிக்கொண்டு சந்திக்க மாட்டேன். எல்லாவற்றையும் வெளிப்படையாக செய்வேன். அதே நேரத்தில் எனது வாக்குறுதிகளை நிறைவேற்ற நீங்கள் எனக்கு அவகாசம் கொடுக்க வேண்டும். அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவேன். பெண்களுக்கான பாதுகாப்பை கண்டிப்பாக உறுதி செய்வேன், போதைப் பொருள் கலாசாரத்தை ஒழிக்க நடவடிக்கை எடுப்பேன். சட்டம்-ஒழுங்கைக் கண்டிப்பாக உறுதி செய்வேன். என்னை அவமானப்படுத்தியவர்களுக்கும், 8 கோடி மக்களுக்கும் பாதுகாப்பு வழங்குவேன்.

அடிப்படை பிரச்னைகளுக்கு முன்னுரிமை கல்வி, மருத்துவம், குடிநீர், சாலை, ரேஷன் போன்ற அடிப்படை பிரச்னைகளில் முழு முதல் கவனம் செலுத்துவேன்.

பெண்கள், விவசாயிகள் உள்பட அனைத்து மக்களும் நமது ஆட்சியில் நன்றாக இருப்போம். சிறுபான்மையினருக்காக நமது அரசு எப்போதும் துணை நிற்கும். தலித், முஸ்லிம், கிறிஸ்தவர்களுக்கான முகம்தான் இந்த விஜய்யின் முகம். 100 சதவீதம் என்னை நம்பலாம்.

முக்கியமாக, இந்த விஜய் மாமாவின் குட்டி நண்பா, நண்பிகளுக்கு நன்றி. அவர்களால்தான் இந்த விஷயம் நடந்துள்ளது. அவர்களின் எதிர்காலத்துக்காக திட்டங்களை நிறைவேற்றுவேன். தவெக தோழர்களுக்கு நன்றி. வாருங்கள் அனைவரும் சேர்ந்து ஒரு புதிய அத்தியாயத்தை தொடங்குவோம். மதச்சார்பற்ற, உண்மையான சமூக நீதியைக் கொண்ட புதிய அரசின் அத்தியாயம் தொடங்குகிறது என்றார் விஜய்.

இந்த உரையில் தவெக அரசு அமைய ஆதரவு தெரிவித்த கட்சிகளின் தலைவர்களுக்கு விஜய் நன்றி தெரிவித்தார்.

# வ[illegible]ந்தியாவைக் கட்டமைக்க கூட்டு முயற்சி: பிரதமர் அழைப்பு

பெங்களூரு, மே 10: சுற்றுச்சூழல் பொறுப்பு, இளைஞர் மேம்பாடு, மன ரீதியிலான நல்வாழ்வின் வாயிலாக வளர்ந்த இந்தியாவைக் கட்டமைக்க கூட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்தார்.

கர்நாடக மாநிலம், பெங்களூரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற வாழும் கலை அமைப்பின் 45-ஆவது ஆண்டு விழாவில் பிரதமர் மோடி பங்கேற்றார். அந்த அமைப்பின் சார்பில் கட்டப்பட்ட புதிய தியான அரங்கையும் திறந்து வைத்து, அவர் பேசியதாவது:

உலகின் தொழில்நுட்ப மையமாக உருவெடுத்ததுடன், நாட்டின் ஆன்மிக மற்றும் கலாசார உணர்வையும் உயர்த்தியுள்ளது பெங்களூரு. தன்னலமற்ற சேவையே, நாட்டின் ஈடுஇணையில்லாத பன்முகத்தன்மையைப் பிணைக்கும் முக்கிய சாராம்சமாகும்.

நாட்டின் ஆன்மிக இயக்கங்கள், வரலாற்று ரீதியாக மனித குல சேவையின் மூலமே தங்களை வெளிப்படுத்திக் கொண்டன. சேவை, ஆன்மிகம், சமூக மாற்றத்தை ஊக்குவிப்பதில் வாழும் கலை அமைப்பின் பங்களிப்பு பெரும் பாராட்டுக்குரியதாகும். பழங்குடியினர் முன்னேற்றம் மற்றும் கைதிகளின் மனநிலை மேம்பாட்டுக்கான முயற்சிகளும் குறிப்பிடத்தக்கவை. நவீன வாழ்க்கை முறையில் சவால்களை எதிர்கொள்ள இளைஞர்களுக்கு இத்தகைய அமைப்புகள் உதவி வருகின்றன.

**உத்வேகமிக்க இளைஞர்கள்**

தேசத்தை கட்டியெழுப்புவதில் அரசியல் அமைப்புமுறையைவிட சமூக பங்கேற்பு மிகவும் சக்திவாய்ந்ததாகும்; சமூகத்தின் தீவிர பங்கேற்பு இல்லாவிட்டால், எந்த அரசும் வெற்றி காண முடியாது.

தற்போதைய டிஜிட்டல் யுகத்தில் இந்தியாவின் முன்னேற்றம் அளப்பரியது. டிஜிட்டல் பரிவர்த்தனைகளில் உலகின் தலைவராக இந்தியா உருவெடுத்துள்ளது. உலக அளவில் புத்தாக்க நிறுவனங்களுக்கு உகந்த சூழல் கொண்ட முதன்மை நாடுகளில் ஒன்றாக விளங்குகிறது. இளைஞர்களின் உத்வேகத்தால் உள்கட்டமைப்பு மற்றும் விண்வெளி தொழில்நுட்பத்தில் முன்னெப்போதும் இல்லாத முன்னேற்றங்களை எட்டி வருகிறோம். அறிவியல் புத்தாக்கங்களில் பங்களிப்பது மட்டுமன்றி, பல்வேறு துறைகளில் முன்னிலையில் உள்ளது இந்தியா. மன அமைதி, சமூகத்தின் மீதான பொறுப்புணர்வு மற்றும் அக்கறை கொண்ட இளைஞர்களால்தான் வளர்ந்த இந்தியாவை கட்டமைக்க முடியும்.

நிலையான வளர்ச்சியில் இருந்து சுற்றுச்சூழல் பாதுகாப்பைப் பிரிக்க முடியாது. சூழலியலும் பொருளாதாரமும் பின்னிப் பிணைந்தவை. மண் வளம், நீர் வளம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் இயற்கை வேளாண்மைக்கான கூட்டு முயற்சிகள் அவசியம் என்றார் அவர்.



கர்நாடக மாநிலம் பெங்களூரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 'வாழும் கலை' அமைப்பு நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடியுடன் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்.

## 'ஓராண்டுக்கு தங்கம் வாங்க வேண்டாம்'

ஹைதராபாத், மே 10: அந்நிய செலாவணியை சேமிக்கும் நோக்கில், திருமணத்துக்கு ஓராண்டுக்குத் தங்கம் வாங்க வேண்டாம்; பெட்ரோல், டீசல், எரிவாயு போன்ற பெட்ரோலியப் பொருள்களை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்று பிரதமர் மோடி வலியுறுத்தியுள்ளார். மேற்காசியப் பிரச்னையின் பின்னணியில் பிரதமரின் இக்கருத்து முக்கியத்துவம் பெற்றுள்ளன.

தெலங்கானா தலைநகர் ஹைதராபாதில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற பிரதமர், ரூ.9,400 கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கிவைத்து பேசியதாவது:

இன்றைய சூழலில் பெட்ரோல், டீசல், எரிவாயு போன்ற பெட்ரோலியப் பொருள்களை அதிகபட்ச சிக்கனத்துடன் பயன்படுத்துவது காலத்தின் தேவையாக உள்ளது. வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் இப்பொருள்களை சிக்கனமாக பயன்படுத்தினால், அந்நிய செலாவணியை சேமிப்பதுடன், போரின் தாக்கங்களையும் குறைக்க முடியும்.

அந்நிய செலாவணியை சேமிக்க உதவும் வகையில், திருமணத்துக்குத் தங்கம் வாங்குவதை ஓராண்டு நிறுத்திவைக்க வேண்டும். வெளிநாட்டுப் பயணங்களையும் ஓராண்டுக்கு ஒத்திவைக்க வேண்டும்.

உலக அளவில் பெட்ரோல்-டீசல் விலை அதிக அளவு உயர்ந்துள்ளது. எனவே அவற்றின் பயன்பாட்டை குறைக்க வேண்டும். கரோனா காலத்தில் வீட்டில் இருந்து பணிபுரிவது, காணொலி வழியில் கூட்டங்களை நடத்துவது போன்ற வழக்கத்துக்கு நாம் அனைவரும் பழகினோம். இந்த வழக்கத்தை மீண்டும் தொடங்கி, அதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டியது தற்போது மிகவும் அவசியம்.

பெட்ரோல்-டீசலை வீணாக்காமல் சேமிப்பதன் மூலம், அவற்றை வாங்குவதற்கு செலவிடப்படும் அந்நிய செலாவணியை சேமிக்க வேண்டியது நம் அனைவரின் பொறுப்பாகும்.

மேற்கு ஆசிய போர் காரணமாக பெட்ரோல், உரங்களின் விலை உயர்ந்துள்ளதைக் கருத்தில் கொண்டு சாத்தியமான எந்தவொரு வழியிலும் நாம் அந்நிய செலாவணியை சேமித்தாக வேண்டும்.

முன்பு 100 சதவீத எல்பிஜி பரவலாக்கத்தில் மத்திய அரசு கவனம் செலுத்தியது. இப்போது குழாய் வழி எரிவாயு (பிஎன்ஜி) விநியோகத்தில் கவனம் செலுத்தப்படுகிறது. சூரிய மின் உற்பத்தியில் கடந்த சில ஆண்டுகளில் உலகின் முதன்மை நாடுகளில் ஒன்றாக இந்தியா உருவெடுத்துள்ளது என்றார் அவர்.

இந்நிகழ்ச்சியில் தெலங்கானா ஆளுநர் சிவ பிரதாப் சுக்லா, முதல்வர் ரேவந்த் ரெட்டி, மத்திய அமைச்சர் ஜி.கிஷண் ரெட்டி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## நாட்டின் முதல் ஜவுளி பூங்கா திறப்பு

மத்திய அரசின் மித்ரா திட்டத்தின்கீழ், தெலங்கானா மாநிலம், வாரங்கல்லில் ரூ.1,695 கோடியில் கட்டமைக்கப்பட்ட நாட்டின் முதலாவது ஜவுளி பூங்காவை பிரதமர் மோடி ஞாயிற்றுக்கிழமை திறந்துவைத்தார்.

தமிழகம், தெலங்கானா, கர்நாடகம் உள்பட 7 மாநிலங்களில் ஜவுளி பூங்கா திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்ட நிலையில், தெலங்கானாவின் வாரங்கல்லில் 1,327 ஏக்கரில் கட்டமைக்கப்பட்ட ஜவுளி பூங்கா திறக்கப்பட்டுள்ளது.

இந்திய ஜவுளித் துறை வளர்ச்சிக்கு உத்வேகமளிக்கும் இந்தப் பூங்கா ரூ.6,000 கோடி முதலீடுகளை ஈர்க்கும்; 24,400-க்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என்று மத்திய ஜவுளித் துறை வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.